2020 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–50

5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஏ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, இடைத் தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு மற்றும் பிற பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தல்-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

[2020 செப்டம்பர் 16

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *தொகுதி மேம்பாட்டு நிதி ஒன்றே முக்கால் கோடியையும்* untied fund*-ல் கொடுக்கச் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) 25 இலட்சம் ரூபாய்* corona materials *(குறுக்கீடு) அதாவது நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்றால், அந்த ஒன்று எழுபத்தைந்து இருக்கிறது அல்லவா, அதை அப்படியே* untied fund*-ல் கொடுக்கச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. துரைமுருகன்: *அதைக் கேட்க வேண்டாமென்று உத்தரவு போடுங்கள். இரண்டு கோடி ரூபாயைக் கொடுங்கள். அந்த இரண்டு கோடி ரூபாயை எங்கள் இஷ்டத்திற்கு செய்துகொள்கிறோம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *அந்த 2 கோடி ரூபாயையும்* untied fund*-ல் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தொகுதி மேம்பாட்டு நிதியைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த 25 இலட்சம் ரூபாயை ஒரு கோடி ரூபாயுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். மீதி இரண்டு கோடி ரூபாய் உங்களுக்கு தொகுதி மேம்பாட்டுப் பணிகளை செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்படும். (குறுக்கீடு) அதைத்தான் சொல்லிவிட்டேன்.*

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)– *தொடர்ச்சி*

(ஊ) சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*